AIDS InfoNet www.aidsinfonet.org

HIV/AIDSக்கான போலிகளை கண்டறிவது எப்படி?
(HOW TO SPOT HIV/AIDS FRAUD)

Fact Sheet Number 206
அத்தியாயம் 206

**HIV போலிகள் என்றால் என்ன**?

HIV போலி என்பது HIV கிருமிகளை கண்டறிவதும், சிகிச்சை செய்வதும் அல்லது முழுவதும் குணப்படுத்த முடியும் என்று விளம்பரம் செய்து அதை ஊக்குவிப்பது அல்லது அதன் தயாரிப்புகளை விற்பனை செய்வதாகும். இவை அனைத்தும் HIV பயன்பாட்டிற்காக பயன்படுத்தலாம் என்று நிரூபிக்கப்படாதவை ஆகும்.

தொடர்ச்சியான மருந்துகள் HIV நோயை குணப்படுத்தாது ஏனெனில் இது தீவிர தொற்று ஆகும். HIV யினால் பாதிக்கப்பட்டோர் பெரும்பாலும் தங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள முயல்கிறார்கள். நிரூபிக்கப்படாத மருந்துகள் அதிக கெடுதலை ஏற்படுத்தும் அதன் மற்ற சில மருந்துகள் அபாயகரமானதாகும். ஒரு வகையான "Brain wave synchronizer" காக்காய் வலிப்பு நோய் ஏற்பட காரணமாகும்.

HIV நோய்க்கான சிகிச்சையை தேர்ந்தெடுக்கும் போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இந்த அத்தியாயம் சிகிச்சைகளை பற்றி மதிப்பீடு செய்ய உதவும், அதே வேளையில் HIV போலிகளை தேர்ந்தெடுக்காத நிலையையும் ஏற்படுத்தும்.

**HIV போலிகளை பற்றிய எச்சரிக்கை அறிகுறிகள்:**

HIV தெரபி பற்றி ஆலோசனை செய்யும்போது இந்த எச்சரிக்கை அறிகுறிகளை கண்டறிய நேர்ந்தால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். சிகிச்சை நன்றாக இருக்கலாம் ஆனால் அதை தெளிவுபடுத்தும் வகையில் பல கேள்விகளை கேட்க வேண்டும், அவை மிகவும் நல்லது என்று நம்பத்தகுந்த வகையில் சொல்லி இருந்தால் அது கீழ்கண்டவாறு இருக்கும்:

- இந்த தயாரிப்பு **HIV /AIDS யை தடுக்கும் அல்லது குணப்படுத்தும்**: ஆராய்ச்சியாளர்கள் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக கடினமாக உழைக்கிறார்கள் ஆனால் இதுவரை HIVயை குணப்படுத்தும் அளவிற்கு எதையும் கண்டறியவில்லை. AIDSலிருந்து பலரும் தங்களை பாதுகாத்துக் கொள்ள HIV தொற்று ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.
- இந்த தயாரிப்பு பொதுவாக **அடிக்கடி அதிகளவில் ஏற்படும் தொந்தரவுகளை குணப்படுத்தும்**: பெரும்பாலான தயாரிப்புகள் குறிப்பிட்ட நோய்களுக்கு எதிராக சிறப்பாக வேலை செய்யும் அல்லது அதனைச் சேர்ந்த நோய்களுக்கு எதிராக செயல்புரியும்.
- **வெற்றியடைந்த தனிப்பட்ட நிகழ்வுகள்**: வெற்றியடைந்த தனிப்பட்ட நிகழ்வுகள் ஒன்றே இந்த தயாரிப்புகள் வேலை செய்ததற்கான சாட்சிகளாகும். இந்த சிகிச்சைகள் சரியாக வேலை செய்தால் அதைப்பற்றி சொல்வதற்கு நாம் அவர்களை கண்டறிய வேண்டும். நற்சான்றிதழ் மூலம் நிரூபிக்க முடியாது. ஆராய்ச்சி முடிவுகளை அல்லது அதற்கான ஆதாரங்களை பார்க்கவும்.
- **அற்புத குணமளிக்கும் சிகிச்சை, ஆச்சர்யமூட்டும் சிகிச்சை, போலிகள் அல்லாத சிகிச்சை, மூலிகைகள் கலந்த ரகசிய சிகிச்சை** போன்ற வார்த்தைகளை சிகிச்சையளிப்பவர் பயன்படுத்தினால் சந்தேகம் கொள்ளவேண்டும். இந்த வார்த்தைகளை நீங்கள் அடிக்கடி கேட்டுக்கொண்டே இருந்தால் அது நன்றாக வேலை செய்வது நிரூபிக்காமல் இருந்தாலும் அது நல்ல சிகிச்சை என்றே நீங்கள் எண்ணுவீர்கள்.
- இந்த சிகிச்சை **அயல்நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டு மற்ற நாடுகளில் பரிசோதிக்கப்பட்டது அல்லது இது அயல்நாடுகளில் மட்டுமே கிடைக்கக்கூடியது**: உண்மையில் முக்கியமான பல்வேறு சிகிச்சைகள் முறைகள் அயல்நாடுகளில் உருவாக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டு வருகின்றது.
- இது **தனிப்பட்ட முறையில் குறுகிய காலத்தில் மட்டுமே கிடைக்கும் அல்லது இருவரின் மூலமே இந்த சிகிச்சை வழங்கப்படும் அல்லது தேவைப்படின் முழுத்தொகையையும் சிகிச்சை**

**ஆரம்பிப்பதற்கு முன்பே முன்பணமாக செலுத்தவேண்டும்.** இந்த தயாரிப்புகள் உண்மையாகவே வேலை செய்தால் ஏன் இந்த விளம்பரம்? ஏன் இது அனைவருக்கும் கிடைக்கும் வகையில் இல்லை? அப்படியிருப்பின் இது அரசாங்கத்தின் மூலம் எளிய வகையில் கிடைக்கச்செய்யலமே?.

- **இது குறித்த ஆராய்ச்சியில் பணம் செலுத்தி சேர்ந்தால் மட்டுமே இந்த சிகிச்சையை பெறமுடியும்:** சிகிச்சை குறித்த பல்வேறு ஆராய்ச்சிகளில் மக்கள் எவ்வித தொகையும் செலுத்தாமல் பங்குபெற்று பரிசோதிக்கப் படுகின்றனர்.

**நிரூபிக்கப்படாத சிகிச்சைகள் குறித்த பொது அறிவு:**

ஒழுங்காக வேலை செய்யாத சிகிச்சைக்காக நீங்கள் அதிக செலவு செய்யும் நிலையை நிறுத்தவேண்டும். நீங்கள் அவை உறுதியாக இருக்கும் என்று நம்பினால் நீங்கள் அதற்காக செலவுச் செய்யலாம் அவை சரிதான் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டியது:

- நிரூபிக்கப்படாத சில சிகிச்சைகள் உங்கள் ஆரோக்கியத்திற்கு கெடுதலை ஏற்படுத்தும்
- மருத்துவ காப்பீட்டுத்தொகை அவைகளுக்காக உங்களுக்கு வழங்கப்பட மாட்டாது.
- நிரூபிக்கப்படாத மருத்துவ சிகிச்சையினால் ஒழுங்காக வேலை செய்யும் நல்ல மருத்துவ சிகிச்சைகளை தொடங்க காலதாமதம் ஆகும் ஏனெனில் அவை நாளடைவில் தீவிரம் அடையும் வாய்ப்பு அதிகம்.

**நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள்:**

நீங்கள் எந்த ஒரு HIV சிகிச்சையிலும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும், குறிப்பாக அதிலும் HIV போலிகளுக்கான அறிகுறிகள் தெரியும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எது நல்லது எது கெட்டது என்பதை பற்றி புரிந்து கொள்வது கடினம் ஏனெனில் உண்மையான HIV சிகிச்சைகளுக்கு அதிக செலவு ஆகும் மற்றும் அதனை புரிந்து கொள்வது கடினம். HIV சிகிச்சைகள் குறித்த கேள்விகள் இங்குள்ளன:

- இந்த தயாரிப்பு பற்றிய தகவல்களை என்னிடம் எழுதித்தர முடியுமா?
- இந்த பொருளை எந்த கம்பெனி தயார் செய்கிறது, அதை நான் எப்படி தொடர்பு கொள்வது?
- இந்த சிகிச்சையை இந்திய மருத்துவ காப்பீட்டுக்கழகம் அனுமதி அளித்துள்ளதா? இல்லை எனில் ஏன் இல்லை?
- இந்தப் பொருளை அல்லது சிகிச்சையை பயன்படுத்துவதால் என்னென்ன பக்கவிளைவுகள் அல்லது ஆபத்துகள் ஏற்படும்?
- என்னுடைய சுகாதார நலபணியாளர் இதனை பற்றிய மேலும் பல தகவல்களுக்கு யாரை அணுகவேண்டும்?

**தேவையான நேரம் ஒதுக்கி முழுவதையும் தெரிந்து கொள்ளவேண்டும்:**

நீங்கள் அறிய விரும்பும் புதிய சிகிச்சை அல்லது மருந்து பற்றி உண்மையான சுகாதார நலபணியாளர் எவ்வித மறுப்பும் தெரிவிக்க மாட்டார். HIV சிகிச்சை பற்றி நீங்கள் முழுமையாக தெரிந்து கொள்ளாமல் அதற்கு தயாராகும் போது அதை அவர் தொடங்கமாட்டார். சில நம்பிக்கையான நபர்கள் மூலம் மேலும் சிகிச்சை பற்றிய பல தகவல்களை தெரிந்து கொள்ளலாம், அவர்கள்:

- உங்களுடைய ஆலோசகர்.
- உங்களுடைய HIV சுகாதார நலபணியாளர்.
- HIV /AIDS சேவை மையம்/ மாநில HIV உள்ளோர் நல கூட்டமைப்பு.

**அடிப்படை வரையறைகள்:**

HIV நோய் என்பது மிகவும் சிக்கலானதாகும், அதை குணப்படுத்த இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை. இங்கு இங்கு பல்வேறு வகையான சிகிச்சைகள் மற்றும் மருந்துகள் HIV நோயுடன் வாழ்பவர்களுக்கு உதவி புரிகிறது, இவற்றில் சில பரிசோதிக்கப்படவில்லை அவை சில அதிகமான கெடுதல்களை ஏற்படுத்தும்.

உங்களுடைய சிகிச்சை மற்றும் மருத்துவ தயாரிப்புகள் பற்றி தேவையான நேரம் ஒதுக்கி அவற்றை மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும், அதிலும் குறிப்பாக HIV போலிகள் குறித்த எச்சரிக்கை அறிகுறிகள் தெரியும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

Reviewed August 24, 2007

A Project of the New Mexico AIDS Education and Training Center. Partially funded by the National Library of Medicine
Fact Sheets can be downloaded from the Internet at http://www.aidsinfonet.org